1981 ஏப்ரல் 9]

சீர்காழி அரசு மருத்துவமனை.

*வினா எண் 721—திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், சீர்காழி அரசு மருத்துவமனையில் எக்ஸ் கதிர் கருவி வேலை செய்யவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) ஆம். சீர்காழி அரசு மருத்துவமனையில் உள்ள எக்ஸ் கதிர் கருவி 13-2-1981 அன்று பழுதுபார்க்கப்பட்டு இயங்கும் நிலையில் உள்ளது.

திருப்பத்தூரிலிருந்து குப்பத்திற்கு (ஆந்திர மாநிலம்) புதிய பேருந்து விடும் திட்டம்.

*வினா எண். 722—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரிலிருந்து ஆந்திர மாநிலம் குப்பத்திற்கு புதிய பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் பகுதியில் இருந்து குப்பம் பகுதிக்கு வியாபார போக்குவரத்து அதிகம் இருக்கிற காரணத்தினாலும் போக்குவரத்து சாலை வசதியும் இருக்கிற காரணத்தினாலும், மாநிலத்தின் ஓரப்பகுதி மக்களுக்கு பயன்படும் காரணத்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து, புதிய பேருந்து விட ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூருக்கு நேரடியாக பேருந்து இல்லை என்று சொன்னாலும், பேரணாம்பட்டிலிருந்து பேருந்து விடப்படுகிறது. தனியாக அதற்கு ஒரு பேருந்து வேண்டும் என்ற நிலை இருக்குமானால் பரிசீலித்து அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[1981] ஏப்ரல் 9

(முற்பகல 9–20)

திரு. தி. அன்புமகன் : தலைவர் அவர்களே, பேரணாம்பட்டுக்கும் திருப்பத்தூருக்கும் இடையே அதிக தொலைவு இருக்கிற காரணத்தால், திருப்பத்தூரில் இருந்து குப்பம் செல்வதற்கு குறுக்குப் பாதை இருப்பதால், அந்தப் பாதை வழியாக புதிய பேருந்து விடுவதால் அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை ஏற்படும் என்கிற காரணத்தால், புதிய பேருந்து விடும் முயற்சியை அரசு மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதிகாரிகள் மூலமாக அதற்கான ஆய்வு அங்கே நடத்தி, தேவைப்படுமானால் புதிய பேருந்து விடப்படும்.

திரு. வெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் இப்படி பல இடங்களுக்கு பேருந்து வேண்டும் என்கிற தேவையிருக்கிறது. ஆனால், புதிய வழித்தடங்களை ஏற்படுத்தக்கூடாது என்று அரசாங்கம் தடை விதித்து இருப்பதால், அதைச் செய்ய இயலாது என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆகவே, அந்தத் தடையை நீக்கி புதிய வழித்தடங்களை இப்படிப்பட்ட பகுதிகளில் ஏற்படுத்தித் தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, புதிய வழித்தடங்கள் ஏற்படுத்துவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. தேவையான இடங்களில் தேவையான பேருந்துகள் விடுவதற்கு இப்போது வாய்ப்பு இருக்கிறது.

திரு. பி. எஸ். துரைசாமி : தலைவர் அவர்களே, திருப்பத்தூரிலிருந்து குப்பம் செல்வதற்கு பேருந்து தேவை என்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட நாட்களாகக் கேட்டு வருகிற காரணத்தால், மீண்டும் அந்தத் திட்டத்தைப் பரிசீலித்து, புதிய பேருந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, வாணியம்பாடி, ஆம்பூரில் இருந்து திருப்பத்தூர் வழியாக பேருந்து இருந்த காரணத்தால்தான் இதுவரையில் அதைப்பற்றி அரசு கவனிக்காமல் இருந்தது. இப்போது அந்த இடத்தில் இருந்து வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற காரணத்தால் அங்கே இருக்கும் சூழ்நிலைகளைப் பார்த்து தேவை இருக்கிறது என்று கருதினால் ஆவன செய்யப்படும்.